[1st September 1970

திரு. எம். எத்திராஜுலு : பழைய பஸ்களில்தான் இந்தப் புகை வருவதாகச் சொல்லப்படுகிறது. புதிய பஸ்களில் இந்த மாதிரி வருவதில்லை. கொஞ்ச காலத்திற்கு முன்பாக வாங்கப்பட்ட பழைய பஸ்களை மாற்றிவிட்டு புதிய பஸ்களையே விடுவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : ஒவ்வொரு பஸ்ஸுக்கும் குறிப்பிட்ட கால அளவு உண்டு. அந்தக் கால அளவு வரையில் அவற்றை உபயோகிக்கவேண்டியிருக்கிறது. அவ்வப்போது பழையவைகளை மாற்றிக்கொண்டுதான் இருக்கிறோம். இப்போதுகூட அரசாங்கம் 70 பஸ்களை வருகிற இரண்டு மாதங்களுக்குள் விடுவதற்கு அனுமதி தந்திருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம்.

Tachometers

*68. *Q*.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal for the installation of Tachometers and its periodical check-up by the Regional Transport Officers in Heavy Passenger Vehicles to avert accidents ?

விசைமானிகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக பெரிய அளவுப் பயணி வண்டிகளில் விசைமானிகள் அமைப்பதற்கும், வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் அவற்றை அவ்வப்போது பரிசோதனை செய்வதற்குமான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இல்லை.

Scavenging Work

*69. *Q*.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether it is a fact that children below 15 years of age are doing scavenging work in Salem and Ramanathanpuram Municipalities; and

(*b*) if so, the action taken by the Government to prevent the child labour ?

துப்புரவு வேலை

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சேலம், ராமநாதபுரம் நகராட்சிகளில், 15 வயதுக்குக் குறைவான சிறுவர்கள் துப்புரவு வேலை செய்கின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதைத் தடுக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?